Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    சித்திரை 29    ( 11 - 05 - 1992 )    திங்கட்கிழமை    ஓசை: 89

4.m.ஜெ

பட்டதாரி ஆசிரியர்கள்

## நிரந்தர நியமனத்திற்கு ஆகஸ்டில் பரீட்சை

பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான பரீட்சை வரும் ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. என கல்விச்சேவை (4 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய போர்த் திட்டங்களை தயாரிப்பதில் சிங்கள இராணுவ தலைமைப்பீடம் தீவிரம்

## பல்லாயிரம் பேருக்கு மீள்பயிற்சி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தம் தொடர்பாக புதிய போர் முறைத் திட்டங்களையும் தந்திரோபாயங்களையும் உருவாக்குவதில் சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடம் தற்சமயம் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அதே சமயம் பெருந் தொகையான இராணுவத்தினருக்கு மீள்பயிற்சியும் அளிக்கப் பட்டுவருகிறது.

கடந்த சில மாதங்களாக வடகிழக்கு போர்முனையில் ஏற்பட்ட பின்னடைவுகளும் பெரும் உயிர்ச்சேதங்களும் காரணமாக புதிய போர் முறைத் திட்டங்களையும், தந்திரோபாயங்களையும் உருவாக்கவேண்டிய நிர்ப்பந்தம் இராணுவ தலைமைப்பீடத்திற்கு ஏற்பட்டுள்ளது. ஆனையிறவு, மணலாறு சமர்களை அடுத்து விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள் என்ற தப்பான மதிப்பீட்டின் அடிப்படையில் வகுக்கப்பட்ட போர் யுக்திகள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதால் இராணுவ தரப்பில் சமீபகாலமாகபதட்டமும் குழம்பிய நிலையும் ஏற்பட்டது. தலைவர் பிரபாகரனின் புதிய போர் யுக்திகளின் அடிப்படையில் புலிகள் மேற்கொண்ட தொடர்ச்சியான மின்னல் வேக அதிரடித்தாக்குதல்கள் இராணுவதரப்பில் பெரும் உயிர்ச்சேதத்தை விளைவித்ததுடன் இராணுவத்தின் மனவுறுதியையும் உடைத்தெறிந்தது. மிகக் குறைந்த கால பயிற்சியுடன் சண்டைகளில் ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாகவே இராணுவத்தினருக்கு பேரிழப்பு ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. இதன் காரணமாக, தற்பொழுது இராணுவத்தினருக்கு பெரியளவில் மீள்பயிற்சி அளிக்கப்பட்டும் (4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கண்ணிவெடியில் மூன்று இராணுவம் பலி

(திருக்கோணமலை)

திருமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடித் தாக்குதலில் மூன்று சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் பச்சைநூர் இராணுவமுகாமிலிருந்து பாலத்தோப்பூர் இராணுவ முகாமிற்கு சென்ற இராணுவ ஜீப் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியமை தெரிந்ததே.

## வீரமுனை கிராமத்தில் தமிழர் கட்டாய குடியேற்றம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனைக் கிராமத்தில் தமிழ் மக்கள் பலாத்காரமாக குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

சிங்கள மூஸ்லிம் குடியேற்றங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள இந்த கிராமத்தில்இராணுவமும் சிறிலங்கா அதிகாரிகளும் தமிழர்களை கட்டாயமாக குடியேறும்படி வற்புறுத்தி வருகின்றனர்.

அகதி முகாம்களில் குடியிருந்த தமிழ் மக்கள் அவர்களது விருப்பமின்றியே வீரமுனைக் கிராமத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாக சிறிலங்கா இராணுவத்தாலும் முஸ்லிம்களாலும் இந்த வீரமுனைக் கிராமம் முற்றாக அழிக்கப்பட்டது. (4 ஆம் பக்கம் பார்க்க)

## குடியேற்றும் முயற்சிகள் புலிகளால் பாதிப்பு

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் சிறிலங்கா இராணுவ காவல் அரண்கள் மீதான திடீர்த் தாக்குதலினால், ...

...கள் இப் பகுதியில் உள்ள இராணுவ காவல் அரண்கள் மீது தொடுத்த அதிரடி நடவடிக்கையினால் தமிழ்க் கிராமமான அப் பகுதியிலிருந்து சிங்...

## கண்ணி வெடியில் ‘பவல்’ சிதறியது அதிகாரி உட்பட இருவர் பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் ஒரு ‘பவல்’ கவச...

...யடி விசேட அதிரடிப் படை முகாமிற்கும் கஞ்சிகுடி விசேட அதிரடிப் படை முகாமிற்கும் இடையிலுள்ள விசார மலை காவலரணுக்கு ஒரு ஜீப், ஒரு...

...ரடிப் படையினர் மீது காவலரணில் இருந்து 400 யார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகளால் கண்ணி வெடித் தாக்குதல் நடாத்தப்...

மட்டக்களப்பில்

## மனித உரிமைகள் பணியகம் அமைக்க முயற்சி

(கொழும்பு)

மட்டக்களப்பில் மனித உரிமைகள் குழுவின் பணியகம் ஒன்றை அமைப்பது குறித்து நோர்வே மனித உரிமைகள் குழுவினர் மட்டக்களப்பில் அரசாங்க உயர் அதிகாரிகளையும், மதத் தலைவர்கள், அரசியல்பிரமுகர்கள் ஆகியோரையும் கலந்தாலோசனை நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை விசேட விமான மொன்றில் மட்டக்களப்பிற்கு வந்த இந்த நால்வர் கொண்ட நார்வேக் குழுவினர் இவர்களுடன் ஆலோ [ 4ஆம் பக்கம் பார்க்க]

## தொண்டர் ஆசிரியர் சங்கம் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக விசேட குழு ஒன்று இன்றுகொழும்பு செல்லஇருக்கிறது. தொண்டர் ஆசிரியர் சங்கத்தின்செயலாளர்,பொருளாளர், தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட இக் குழுவினர் இன்று மாலை இங்கிருந்து புறப்பட்டுச்செல்ல இருக்கின்றனர். கல்விச்சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் மற்றும் உயர்அதிகாரிகள் ஆகியோரை இவர்கள் சந்தித்து தமது நிரந்தர நியமனம் தொ [4 ஆம் பக்கம் பார்க்க]

## பரீட்சை முடிவுகள் நேற்று நண்பகல் வந்தன

(யாழ்ப்பாணம்)

1990 ஆண்டுக்கான க.பொ.த. (சாதாரணதர) விசேட...

இப்பரீட்சை முடிவுகள் யாழ் கல்வித் திணைக்களத்தில் உடன் தரம் பிரிக்கப்பட்டு ஒவ்...

திடீர்த் தாக்குதலினால், கொக்குவெளி சிங்கள குடியேற்ற வாசிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இராணுவத்தின் உதவியுடன் கொக்குவெளி பகுதியில் சிங்கள மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டமைதெரிந்ததே.

சமீபத்தில், விடுதலைப் புலி

மான அப் பகுதியிலிருந்து சிங்கள மக்கள் இடம்பெயரத் தொடங்கியுள்ளனராம்.

புலிகளின் இந் நடவடிக்கையினால் இராணுவத்தின் குடியேற்றத்திட்டமும் பாதுகாப்பு நடவடிக்கையும் ஆட்டம் காணத் தொடங்கியுள்ளதாக தெரியவருகிறது. (தி)

குதலில் ஒரு 'பவல்' கவச வாகனம் முற்றாகச்சேதமடைந்தது. அதில் பயணம் செய்த ஒரு சிறிலங்கா விசேட அதிரடிப் படை அதிகாரி உட்பட இருவர் பலியாகினர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது நேற்று முன்தினம் பகல் 12.45 மணியளவில் அம்பாறை தாண்டி

காவலரணுக்கு ஒரு ஜீப், ஒரு கவசவாகனம் சகிதம் விசேட அதிரடிப்படையினர் வந்து கொண்டிருந்தனர். இவ் அதி

வெடித் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலால் கவசவாகனம் முற்றாகச் சேதமடைந்ததுடன் இரண்டு அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர்.

சேதமடைந்த கவசவாகனம் கைவிடப்பட்ட நிலையில் அவ்விடத்திலேயே காணப்படுகிறது.

த. (சாதாரணதர) விசேட பரீட்சைக்குத் தோற்றிய யாழ். மாவட்ட தனிப்பட்ட பாடசாலை பரீட்சார்த்திகளின் முடிவுகள் கொழும்பில் இருந்து நேற்று 11.30 மணியளவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் யாழ். கல்வித்திணைக்களம் வந்து சேர்ந்தன.

உடன் தரம் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாடசாலையினதும் கோட்டக் காரியாலயங்களுக்கு நேற்று உடன் அனுப்பி வைக்கப்பட்டன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகளும் நேற்று அவரவர் முகவரிகளுக்கு தபாலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. (பா)

# ரயிலில் பிரயாணம் செய்த 6 தமிழர்கள் கடத்தப்பட்டனர்

## வாழைச்சேனையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

கொழும்பிலிருந்து கடந்த திங்கட்கிழமை இரவு மட்டக்களப்பிற்கு சென்ற ரயிலில் பயணம் செய்த ஆறு தமிழர்கள் வாழைச்சேனை ரயில் நிலையத்தில் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொல்லுகள்மற்றும்ஆயுதங்களுடன் வந்த ஒரு கோஷ்டியினரே மேற்படி ஆறு தமிழர்களையும் கடத்திச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஐயங்கேணி போன்றகிராமங்களில் வாழும் தமிழர்கள் தங்களுக்கு பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

பகல் வேளைகளில் அங்கு வரும் ஊர்காவல் படையினர் தங்களை அச்சுறுத்தி விட்டுச் செல்வதனால் இரவு நேரங்களில் அச்சத்தினால் தாங்கள் காடுகளுக்குள் சென்று தங்கியிருந்துவிட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு

# நீதி மன்றம் குப்பை கூடையல்ல நீதியரசர் எச்சரிக்கை

[கொழும்பு]

உயர் நீதிமன்றம் ஒன்றுக்கு உதவாத பொருள்களைத் தள்ளும் இடமல்ல என்பதை சட்டமா அதிபர் திணைக்களம் உணர்ந்து கொள்ள வேண்டும் நீதிமன்றம் வெறும் குப்பையுடன் நேரத்தை வீணாகப் போக்கக் கூடாது. ஒழுங்கற்ற குற்றச்சாட்டை வைத்துக் கொண்டு வழக்கை இழுத்தடிப்பது செத்த குதிரையைச் சாட்டையால் அடிப்பது போன்றதாகும் என்று கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் எவ்.எஸ்.டி. ஜெயசூரியா சட்டமா அதிபர் திணைக்களத்தை எச்சரித்துள்ளார்.

இந்தியா - சிறிலங்கா உடன்படிக்கைக் காலப் பகுதியான 25-7-87 இல் பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட 17 பேரையும் விடுதலை செய்தபோதுமேற்கண்டவாறு நீதியரசர் குறிப்பிட்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தை இழிவு படுத்துவது நீதிமன்றத்தின் நோக்கமல்ல திணைக்களத்தின் குறை குற்றங்களைக் களைவதே நீதிமன்றத்தின்நோக்கம் சரியாகப் பரிசீலிக்காமல் பொலிஸ்சமர்ப்பிக்கும் கோவைகளை அப்படியே சட்டமாஅதிபர்திணைக்களம் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தக் கூடாது என்றார் அவர்.

நீதியரசர் மேலும் தெரிவிக்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம்மூன்று வருடங்களுக்கு முன் தாக்கல் செய்யப்பட்ட போதிலும் சட்டமா அதிபர் திணைக்களம் சரியான விசாரணையை மேற்கொள்ளவில்லை. அதனால் அது நீதிமன்றத்தில் மூன்றுவருடங்கள் போடப்பட்டுக் கிடந்தது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### 2-ம் லெப், மாவி

நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற வெடிவிபத் தொன்றில் 2-ம் லெப்டினன்ட் மாவி (நாகலிங்கம் பகீரதன் மீசாலை தெற்கு) என்றபோராளி வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தைத்தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கதிரவெளியில் 60 மிமீமோட்டார் கைப்பற்றப்பட்டது

மட்டக்களப்பு மாவட்டம் கதிரவெளியில் கடந்த ஏழாம் திகதி இடம்பெற்ற தாக்குதல் நடைபெற்ற இடத்திலிருந்து ஒரு 60 மி. மீ. மோட்டார் ஒன்றை கைப்பற்றியுள்ளனர்.

கதிரவெளி என்னும் இடத்தை முற்றுகையிட்டு திரும்பிக் கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளின் அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருந்தமை தெரிந்ததே.

## பாடசாலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்டத்தினால் நிர்வகிக்கப்படும் இடம் பெயர்ந்த தீவக மாணவர்களுக்கான பாடசாலைத் திறப்புவிழா திஇன்றுங்கட்கிழமை பகல் பத்து மணிக்கு நாவற்குழி ஐயனார் முகாமில் வைப

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைத் தடை செய்வதில் அரசிற்குத் தயக்கமேதுமில்லை

## - இந்திய மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்

(திருச்சி)

தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் ஒரு விசாரணைக் குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களுக்கு அந்தத் தீவிரவாதிகளுடன் தொடர்பு இருப்பதாக நிரூபிக்கப்பட்டால், அவர் யாராக இருந்தாலும் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய வர்த்தக துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் கூறினார்.

திருச்சியில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய ப. சிதம்பரம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தியாவில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வதில் மத்திய அரசுக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை என்றும், விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கான ஆதாரங்களைத் தொகுத்து உரிய சட்டப் பிரகடனத்தை வெளியிட வேண்டியிருப்பதால் இதில் மத்திய அரசு மிகக் கவனத்துடன் செயற்பட வேண்டியுள்ளது என்ற அவர் இன்னும் சில நாட்களில் இது குறித்து முடிவு அறிவிக்கப்படும் என்றும் கூறினார்

தமிழகத்தில் தற்போது விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களின் செயற்பாடு பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் தடை விவகாரம் தீவிர பரிசீலனையிலுள்ளது

## - ஜேக்கப்

(கொச்சி))

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை தடைசெய்வது குறித்து மத்திய அமைச்சரவையின் தீவிர பரிசீலனையிலுள்ளது என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். என். ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

கொச்சியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவும் நிதியுதவியும் அளிக்கும் ஸ்தாபனங்களின் நடவடிக்கையும் ஒடுக்கப்படும் என்றும் ஜேக்கப் தெரிவித்தார்.

காஷ்மீர் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது அங்கு நிலைமை குறிப்பிடத்தக்களவு மேம்பட்டிருக்கிறது என்றும், இயன்றளவு விரைவில் தேர்தலை நடத்த அரசு விரும்புகிறது என்றும்,

எல்லையில் பதட்டமுள்ள பகுதிகளில் அறுநூறு கிலோ மீற்றர் தொலைவிற்கு முட்கம்பி வேலி போடப்பட்டிருக்கிறது என்றும், பாகிஸ்தானில் பயிற்சி பெற்றோர் ஊடுருவாமல் தடுக்க எல்லைப் பகுதியில் சாலைகள் போடப்படுகின்றன என்றும் ஜேக்கப்தெரிவித்தார்

அத்துடன் வகுப்புப் பதட்டத்தை சமாளிக்க மத்திய ரிசேவ் பொலிஸ் படையின் சிறப்பு அணி ஒன்று உருவாக்கப்படுகின்றது என்றும், இதற்கென தமிழகத்திற்கும், உத்தர பிரதேசத்திற்கும் தலா பத்துக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# யாழ். ஆயர் மேதகு. கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின்
# பவள, பொன், வெள்ளி விழாச் சிறப்பிதழ்

## ஆன்மீகத்துடன் மொழி,கலை உணர்வுகளை இணைத்து வெற்றி கண்டவர் தியோகுப்பிள்ளை ஆண்டகை

– பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார்.

யாழ். ஆயர் மேதகு வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் வெள்ளி, பொன், பவள விழாவினை முன்னிட்டு திருமறைக் கலாமன்ற இயக்குனர் புலவர் நீ. மரியசேவியர் அடிகளார் தரும் செவ்வி ஒன்றினை இங்கு தந்துள்ளோம்.

★ கேள்வி: அடிகளார் அவர்களே! உங்கள் மன்றம் ஆயர் அவர்களின் கலை, இலக்கியப் பணியின் ஒரு அங்கமேதான் என்று நினைப்பதில் தவறில்லையே?

பதில்: எமது மன்றம் அவரின் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் கலைக் கூடம் எனில் வியப்பன்று. கலைவழி இறைபணி என்ற இலட்சியத்தோடு ஆயரின் கலை இலக்கியத் தொண்டிற்கு ஊன்றுகோலாக நின்று அவரின் மேற்பார்வையில் தமிழ் கூறும் நல்லுலகிற்கு நற்பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. திருமறைக் கலாமன்றம்.

### இறைவன் கொடுத்த வரம்

★ கேள்வி: அவருக்கு விமரிசையாக இந்த விழா எடுப்பதில் உள்ள சிறப்பம்சம் என்னவென்று கூறுவீர்களா?

பதில்: தன் வாழ்க்கையில் 75 ஆண்டுகளைக் கடந்தமை, குருத்துவத்தில் 50 ஆண்டுகளை முடித்தமை ஆயர்பணியில் 25 ஆண்டுகளை இணைத்தமை பாராட்டுக்குரியதெனினும், இவை மூன்றும் ஒன்று சேர்ந்து இணைந்தமை சிறப்புக்குரியதோர் அம்சமாகும். இது அவருக்கு இறைவன் கொடுத்த ஒரு வரம் எனக் கண்டோம். விழா எடுப்பது தகுமெனக் கொண்டோம்.

★ கேள்வி: உங்கள் பார்வையில் ஆயரின் தனித்துவம் பற்றி சிறப்பாக ஏதாவது கூறுவீர்களா?

பதில்: சுருங்கக் கூறி விளங்கவைக்கின்
''சொல்லுக சொல்லை பிறிதோர் சொல் - அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து''

என்ற வான்புகழ் வள்ளுவன்வாக்கிற்கு அவர் ஒரு எடுத்துக்காட்டு. அவர் நன்றே சொல்வார், அதை செய்தே முடிப்பார். அவர் மௌனமே ஒரு சாதனை வையத்தில் வாழ்வாங்கு வாழும் ஒரு சான்றோன் அவர்.

### மொழி, இன கலைப்பற்று

★ கேள்வி ஆயரின் கலைப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று பற்றி நீங்கள் கூற விரும்புவது?

பதில்: அவரின் கலைப்பற்றுக்கு எடுத்துக்காட்டு எமது மன்றம்; அவரே எமது வழிகாட்டி. அதனூடாக அவர் ஆற்றும் பணிகள் ஏராளம்.

ஈழத்தமிழரின் பரம்பரைச் சொத்தாகிய நாட்டுக்கூத்தை நவீனப்படுத்த நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்பவர். ஆய்வுரைகள், கட்டுரைகள் பல எழுதிக் கூத்தின் பெருமைதனை எடுத்தியம்பும் ஆற்றல் மிகு கலைஞர்வர். கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்களையும் அம்மானைகளையும் ஆய்வு செய்யும் ஒரு இலக்கிய கர்த்தா.

கத்தோலிக்க மதம் கடல் கடந்து வந்த மதம் என்ற எண்ணத்தை மாற்றியமைத்து, மக்களின் மொழியோடும், பண்பாடோடும் அதனை இணைத்தவர். இறைவழிபாட்டில் தமிழ் பண்பாட்டைப் புகுத்தியும், ஆன்மீகத்துடன் மொழியுணர்வை இணைத்தும் வெற்றி கண்டவர் இவரெனலாம்.

ஒடுக்கப்பட்ட மக்களின் சனக்குரலை அகிலத்திற்கு எடுத்துக் காட்டியது எங்கள் ஆயரின் குரல் என்று நாம் பெருமையோடு கூறமுடியும். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் கூறியது போல் ''ஈழத்தமிழர்களின் இன்னல்களை உலக அரங்கில் அதிகார பூர்வமான செய்தியாக்கியது ஆயரின் குரலே'' என்பதில் உண்மையுண்டு. இச்சந்தர்ப்பத்தில் ஒரு நிகழ்ச்சியைக் கூறவிரும்புகின்றேன். அன்று இந்தியப் படையினர் புகுந்துவிட்டனர் ஆயரின் அறைக்குள். இருக்கையை விட்டு எழும்பாத ஆயரைப் பார்த்து 'எழும்பு' என்றான் அந்த தலைமைச் சிப்பாய். ஆயரின் பதிலோ 'நீர் விரும்பினால் இருக்கலாம்,



## திருத்தந்தையிடமிருந்து யாழ். ஆயருக்கு வாழ்த்து

யாழ். ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு அவரது குருத்துவ பொன் விழாவையொட்டி திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் பின்வரும் வாழ்த்துக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

வணக்கத்துக்குரிய சகோதரரே!

முன்புபோலவே இன்றைய காலத்தில் இன்னும் அதிகமாக அண்மையில் நிகழவிருக்கும் உங்கள் குருத்துவ அபிஷேகத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை நினைவு கூர்வது தக்கதேயாம். மலரும் இளமைப் பருவத்தை இங்கு ரோமாபுரியில் நீங்கள் கழித்ததும், மானிட மறையியல் பயிற்சிகளைப் பெற்று, அவற்றின் உதவியுடன் மறைப்பணியை ஆரம்பிப்பதற்கு வேண்டிய வழிதுறைகளையும் ஆதாரத்தையும் அடைந்து கொண்டதும் இந்நினைவு கூர்தலில் அடங்கும்.

திருச்சபை நிறுவனங்களையோ' முற்றும் அப்பாவிக்களான மக்களையோ பொருட்படுத்தாத குழறும் உள்நாட்டுப் போரினால் விசுவாசிகளுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல், இடையூறுகள் எமக்குத் தெரியாததொன்றல்ல.

வணக்கத்துக்குரிய சகோதரரே, உங்கள் பெருவிழா அடுத்திருக்கும் இவ்வேளையில் இந்த அழிவுகளைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு மிகவும் மனம் வருந்துகிறோம். இறைவன் உங்கள் மட்டிற் காட்டிய பெருந் தயவையும் திருச்சபையின் முன்னேற்றத்தையும் உங்களுடன் எண்ணிப்பார்ப்பதே எமது விருப்பம், ஆனால் உங்களுடன் முற்றும் இணைந்திருக்க வேண்டுமென்ற விருப்பத்தால் உங்கள் துயரங்கள், கவலைகளைப் பகிர்ந்து கொள்ள விழைகின்றோம்.

ஆகவே எமக்கிடையே நெடுந்தூரம் இருந்த போதிலும் உங்களது பொன்விழாவை நீங்கள் கொண்டாடுகையில் உள்ளத்திலும் ஆன்மாவிலும் இசைவுடன் பாராட்டுவோம். ஒரு பற்றுமிக்க பாதுகாவலராக ஞானத்துடனும் அறிவாற்றலுடனும் நீங்கள் ஆண்டு வரும் மக்கள் மத்தியில் நீங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர் என்பதை நாம மறந்துவிடமுடியாது

இது வத்திக்கான் நகரில் கிறிஸ்து ஆண்டு 991 நவம்பர் 28 ஆம் நாள் எமது ஆட்சியின் 14 ஆவது ஆண்டில் அளிக்கப்பட்டது.

2ஆம் அருள் சின்னப்பர்

### ஆயரின் சேவைகள்

★ கேள்வி இறுதியாக ஒன்று. இன்றைய இந்த மண்ணின் சூழலில் ஆயரின் சேவை எந்த வகையில் அமைந்துள்ளது என்பதைக் கூறமுடியுமா?

பதில்: இந்த மண்ணின் இன்றைய அவல நிலையை உணர்ந்து ஆயர் ஆற்றியுள்ள பணிகள் எண்ணிலடங்கா. ஆயரின் ஆதரவில் இயங்கும் ''மனித முன்னேற்ற நடு நிலையம்'' (HUDEC) இதற்கு ஒரு முன்னுதாரணமாகும். கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் இத்தாபனத்தின் மூலம் இன, மத பேதமின்றி நிவாரண உதவிகள் அளிக்கப்படுகின்றன. அகால மரணமுற்றவர்களுக்கும், வன்செயலால் சுயதொழில் இழந்தவர்களுக்கும் முதலீடுகள் வழங்கப்படுகின்றன. வன்செயலால் பாதிக்கப்பட்டு அநாதையானவர்களைப் பராமரிக்க உருத்திரபுரத்தில் உள்ள 'உதய தீபம்' எனும் தற்காலிக இல்லம் போன்று பல இல்லங்கள் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை அழிவுகள் ஏற்பட்ட பொழுது, அரசாங்க அதிபர், நல்லை ஆதீனக் குருக்கள், முஸ்லிம் மௌலவி ஆகியோரின்

செவ்வி:
தந்தவர்:
பேராசிரியர் நீ மரியசேவியர் அடிகளார்
கண்டவர்:
பி. எஸ். அல்பிரட்

சிறப்பிதழ் தயாரிப்பு
த. பரமலிங்கம்

### பன்முகப்பட்ட தொண்டாளர்

வணக்கத்துக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ் மறை மாவட்டத்தின் பேராயர் ஆவார். அன்னாரின் சேவைகள் இலகுவில் மறக்க இயலாதன. யாழ். ஆயராக இருந்துமக்கள் நலனுக்காகஉழைத்தஇப்பெரியார் மக்களால் பாராட்டத்தக்கவர். இவரின் சேவைநலன்களைப் பாராட்டி ஈழநாதம்நாளிதழ்சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவது சாலப் பொருத்தமானது.

சேவையால் உயர்ந்த இச்செம்மலின் தொண்டுகள் பன்முகப்பட்டன. அவருக்காக எடுக்கப்படும் விழாக்கள் எதுவானாலும் அது உள்ளன்புடன் எடுக்கப்படும் விழாவாகவே கருதப்படும். அடிகளார் நீடிய ஆயுளும் நீண்ட புகழும் பெற்

கின்றேன். அன்று இந்தியப் படையினர் புகுந்துவிட்டனர் ஆயரின் அறைக்குள். இருக்கையை விட்டு எழும்பாத ஆயரைப் பார்த்து 'எழும்பு' என்றான் அந்த தலைமைச் சிப்பாய். ஆயரின் பதிலோ 'நீர் விரும்பினால் இருக்கலாம். நான் எழும்ப முடியாது' என்று தொனித்தது. சிப்பாயிடமிருந்து திரும்பவும் அதே ஆணை; ஆயரிடமிருந்து அதே பதில். திகைத்தான் சிப்பாய். திரும்பினான் அறையை விட்டு. ஆமாம் அங்கே அவர் மறைத்தலைவர் மட்டுமல்ல மானமுள்ள தமிழ்த் தலைவராகவும் திகழ்ந்தாரே. இது ஒன்றே போதும் அவரின் இனப்பற்றுக்கு.

வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை அழிவுகள் ஏற்பட்ட பொழுது, அரசாங்க அதிபர், நல்லை ஆதீனக் குருக்கள், முஸ்லிம் மௌலவி ஆகியோரின் வேண்டுகோள்களின் பேரில நிவாரணம் வழங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இன்னும் பல சுய தொழிற் பயிற்சி வகுப்புக்கள், தொழிற் கூடங்கள், தையல் நிலையங்கள் வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நடமாடும் வைத்தியப் பிரிவு போன்ற நிவாரண சேவைகள் இன்றும் இந்த மண்ணின் மக்களுக்காக இயங்கிக் கொண்டிருக்கின்றமை ஆயர் இந்த மண்ணை, மக்களை எவ்வளவு தூரம் நேசிக்கின்றார் என்பதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

கருதப்படும். அடிகளார் நீடிய ஆயுளும் நீண்ட புகழும் பெற்றுப் பல்லாண்டு வாழ மனமார வாழ்த்துகின்றேன்.

**கா.மாணிக்கவாசகர்**

யாழ் அரச அதிபரும் மாவட்ட ஆணையாளரும். (சி-4394)

## வரி விளம்பரம்

### சங்கீதம் வினாவிடை

சங்கீதம் வினாவிடை தயாரிப்பு ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா 6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம் ஆண்டுகளிலும் வட இலங்கைச் சங்கீத சபையின் 2 ஆம் தரம் பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது: நடுவுத் துருத்தி நல்லூர்ச் சந்தை வெளியீடு: கிடைக்குமிடம் ஸ்ரீ காந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (6250)

### தவறி விட்டது

வவுனியா இராணுவ தடைமுகாமில் ஒரு சொப்பிங் பாக்கிற்குள் 2 பாஸ்போட், 2 மூக்குக்கண்ணாடி முதலியன தவறி விட்டன, கண்டெடுத்தவர்கள் சின்னையா செல்லையா, வைரவர் கோயிலடி, வண்ணார் பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (2563)

### உத்தியோகத்தர் தெரிவு

ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் சங்கப் பணிமனையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செ.சிவபாதம், உபதலைவர்: பா. லிங்கநாதன், செயலாளர்: எஸ். இரகுநாதன் உப செயலாளர்: மு. பத்மநாதன், பொருளாளர்: எம். ஜெகநாதன்.

## விளையாட்டுப் போட்டி பங்கு பெற விண்ணப்பிக்குக

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடத்தப்படும் இவ் வருடத்திற்குரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிப்பவர்களும், இப் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்தவர்களும் தகுதி பெற்றவர்களாவர். இப்போட்டிகளில் பங்கு பற்றவிரும்பும் தனிநபர்கள் தனிப்பட்ட முறையிலும், குழு நிலை போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் இப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு ஊடாகவும் விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் இருபத்தைந்தாம் திகதிக்கு முன்பதாக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டுமெனப் பிரதேச செயலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்று (11 - 05 - 92) பவள, பொன், வெள்ளி விழாக்களை ஒருங்கே கொண்டாடும் மேதகு ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையை வாழ்த்துவதில் பேருவகை கொள்ளுகின்றோம்.

★ பல் கட்டுவதிலும்

★ கண்களுக்கு கண்ணாடி வழங்குவதிலும்

நிபுணத்துவம் பெற்றவர்



**பி. ஐ. பர்னான்டோ**

542, ஆஸ்பத்திரி வீதி,

(யாழ். மருத்துவமனை முன்பாக)

யாழ்ப்பாணம்,

(சி-4396)

## பவள, பொன், வெள்ளிவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

(குருநகர்)

இன்று (11-05-92) யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பவள, பொன், வெள்ளி விழா வைபவம் யாழ். பேராலயம், ஆசனக் கோயில் திறந்த வெளியரங்கு ஆகியவற்றில் வெகு விமரிசையாக நடைபெற இருக்கிறது.

பிற்பகல் 3-30 மணிக்கு ஈழ நல்லூர் திரு பி.எஸ். பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மாலை 4-00 மணிக்கு ஆயர்கள், பங்குத்தந்தையர்கள் கலந்து நடத்தும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலை 5-30 மணிக்கு மாலையிடல், அருட்திரு எஸ். ஏ.மைக்கல்சாமி அடிகள் குரு முதல்வர், ஆயரவர்களுக்கு.

ஆயரை மங்கள இசையுடன் ஆசனக் கோயில் திறந்த வெளியரங்கிற்கு அழைத்துச் செல்லல். யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட மாணவியரின் இறைவணக்க, வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து அருட்திரு றெஜிராஜேஸ்வரன் அடிகள் ஆயருக்கு மாலையிடுவார்.

அதனைத் தொடர்ந்து விழாவுக்கு நாட்டின் நாலா பக்கமும் இருந்து வருகை தந்துள்ள ஆயர்களுக்கு மாலையிடும் நிகழ்ச்சி இடம் பெறும்.

அருட்திரு எஸ்.ஏ மைக்கல் சாமி அடிகளாரின் தலைமையுரையை அடுத்து வாழ்த்துப்பா, வாழ்த்துரைகள் நடைபெறும்.

நல்லை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், இலங்கை கத்தோலிக்க ஆயர் அவைத்தலைவர் பேரருள் பெருந்தகை நீக்கலஸ் மார்க்கஸ் தென் இந்தியத் திருச்சபை ஆயர் மேதகு, கலாநிதி -டீ. ஜே. அம்பலவாணர் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு யோகரெத்தினம் யோகி, யாழ் அரச அதிபர் மாண்புமிகு கா.மாணிக்கவாசகர், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசா, மன்னார் மறை வட்ட குருமுதல்வர் அருட்திரு, ஏ.சேவியர் குரூஸ் அடிகள், யாழ் மறைவட்டத் துறவிகள் சார்பில் அருட்செல்வி மேரி யுடெக்ஸி ஆகியோர் வாழ்த்துரைகளை நிகழ்த்துவர்.

விழாச் சிறப்பு மலரை அருட்திரு பிரான்சீஸ் யோசெப் அடிகளார் வெளியிட்டு வைப்பார்.

இறுதியாக யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் சிறப்புக் கலை நிகழ்ச்சியில் "திருச்செல்வர் காவியம் அபிநயநாடகம் இடம் பெறும். (21)

## சிற்றூர்திச் சேவை

(யாழ்ப்பாணம்)

மக்களின் நலன்கருதி இதுவரை தடைப்பட்டிருந்த யாழ்-பலாலி சேவை (764) பாதை இன்று 11 ஆம் திகதி முதல் யாழ் - தெற்குப் புன்னாலைக் கட்டுவன்வரை நடைபெறும் என வட பிராந்திய சிற்றூர்தி சேவைச்சங்கம் அறிவித்துள்ளது.

## ஆண்டு ஒன்று வகுப்பு அனுமதி

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அனுமதிகள் பற்றி கல்வி உயர்கல்வி அமைச்சு விடுத்த சுற்றறிக்கையின்படி ஆண்டு ஒன்று அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சேரவேண்டிய கடைசித் திகதி மே 31.

அரசாங்க பாடசாலைகளில் ஆண்டு ஒன்று வகுப்புகளுக்கு பிள்ளைகளுக்கு அனுமதி கோரும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தமது நிரந்தரமான வதிவிடத்துக்கு அண்மையில் உள்ள பாடசாலை அதிபருக்கு 1992 மே 31 ஆந் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்று கோரப்படுகிறார்கள்.

அனுமதி பெறத் தகுதி பெற்ற பிள்ளைகள் 1993 ஜனவரி 31 ஆந் திகதி 5 வயது பூர்த்தியானவர்களாக, அதாவது 1988 ஜனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்.

## நினைவு கூருகின்றோம்...

### 1992-05-11

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு, கல்லடி முகாமில் வைத்து சிறிலங்கா அதிரடிப்படையினரால் கொலை செய்யப்பட்ட -

**நாதன்** (கந்தசாமி சிவநாதன் - திருப்பழுகாமம், மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -

**சிவா** (சிவலிங்கம் சிவானந்தன் - பதுளை)

1991 ஆம் ஆண்டு வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகனவிபத்தில் எமைப்பிரிந்த

**சைமன்** (க. சந்திரபாலன் - தருமபுரம், கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4395)

## சிந்தனைக்கு

சிறு தவறுகளை தவிர்த்து, பெரும் பிழையில் அகப்பட்டுக் கொள்பவனுக்கு 'நிபுணன்' என்று பெயர்.

— பெஞ்சமின் ஸ்டோல் பெரிக்

ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2329 நிர்வாகபீடம் 3808
த.பெ. எண் 65

## மட்டு. அரச அதிபரின் அரச விசுவாசம்?

''வாவி மீன்பிடித்தலுடன் மட்டும் நின்றுவிடாது கூடுதலான பயிற்சியைப் பெற்று ஆழ்கடல் மீன்பிடித் தொழிலிலும் நீங்கள் ஈடுபடவேண்டும். வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு 600 கோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மீனவருக்கு மானியமாக 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு பதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வலையும் சேமிப்புப்புத்தகமும் வழங்கும் வைபவத்தில் பேசிய மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஆர். மோனகுருசாமி தெரிவித்துள்ளார். அத்தோடு நொச்சிமுனை கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 43 மீனவர்களுக்கு தலா 750 ரூபா பெறுமதியான வலையும் 250 ரூபா பெறுமதியான சேமிப்புப் புத்தகத்தையும் வழங்கினார்.

மட்டக்களப்பு அரச அதிபரின் இப் பேச்சு கேட்க நன்றாகத்தான் உள்ளது. வாவியில் மட்டுமே மீன்பிடியை விட்டு ஆழ்கடல் மீன்பிடி மேற்கொண்டால் மீனவர்களின் பொருளாதார நிலை உயரும் என்பதும் வளமாக வாழலாம் என்பதும் சரியானதுதான். ஆனால் மட்டக்களப்பு அரச அதிபர் தற்பொழுது மட்டக்களப்பில்தான் இருக்கின்றாரா? அல்லது வேறு எங்காவது இருக்கின்றாரா? என்பதுதான் சந்தேகமாக இருக்கின்றது.

மட்டக்களப்பில் இன்றுள்ள நிலையில் வாவியில் போக்குவரத்துச் செய்வதற்கே கட்டுப்பாடுகளும் தடைகளும் உள்ளன. பல படகுகளில் ஒரே நேரத்தில் பயணங்களை மேற்கொள்ளுதல், இரவு நேரத்தில் பயணங்கள் மேற்கொள்ளுதல் என்பவற்றிற்கு தடை என்பதால் அன்றாட அத்தியாவசிய தேவைகளுக்கே வாவியை மக்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் வாவியில் மட்டும் மீன்பிடித்தால் போதாது 'ஆழ்கடலில் சென்றும் மீன்பிடித்தல் வேண்டும்', என்ற அரசாங்க அதிபரின் கூற்றே, அரச அதிபர் மட்டக்களப்பில்தான் உள்ளாரா என்ற கேள்வியை எழுப்புவதாக.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் தாம் உற்பத்திசெய்த நெல்லை அறுவடை செய்து வீட்டிற்கு கொண்டுவரமுடியாத நிலையில் உள்ளனர். அறுவடை செய்த நெல்லைக்கூட இராணுவம் பறித்துச் செல்கின்றது. முஸ்லீம் காடையர்களின் அடாவடித்தனத்தினால்தமிழர்கள் வீட்டைவிட்டு வெளியில்செல்ல அஞ்சுகின்றனர். இந்நிலையில்ஆழ்கடலுக்குச் செல்லுங்கள் மீன்

# திருப்பதி காங்கிரஸ் மாநாட்டில் கோஷ்டி பூசலுக்கு குறைவில்லை

இருபதுவருடங்களுக்குப் பின்னர் அண்மையில் திருப்பதியில் அகிலஇந்திய காங்கிரஸ் கட்சியின் மாநாடு நடந்துமுடிந்துள்ளது நேரு குடும்பத்தைச் சேர்ந்த யாருமே பங்கு பெறாத முதலாவது காங்கிரஸ் மாநாடு இது என்பது குறிப்பிடத் தக்கது.எனினும் 'ராஜீவ் நகர்' என்று மாநாடு நடந்த இடத்துக்கு பெயர் சூட்டியதன் மூலமும், மேடையில் பிரமாண்டமான அளவில் இந்திரா,ராஜீவ் வண்ணப்படங்கள் வைக்கப்பட்டதன் மூலமும் இன்றைய காங்கிரஸ் தலைவர்கள் அந்தக் குடும்பத்தின் மீதானதமது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டனர்.

மாநாடு நடந்த திருப்பதி ஆந்திரப் பிரதேசம் என்றும் பிரதமர் நரசிம்மராவின் சொந்த மாநிலம் என்பதால் போலும் நரசிம்மராவ் இம்முறை பெருமளவில் விளம்பரப்படுத்தப்பட்டார். போஸ்டர் கொடி, கட்அவுட் என்று எங்கெங்கு காணினும் நரசிம்மராவ் மயம். இருந்தும் நரசிம்மராவ் வருவதற்கு சில மணி நேரங்கள் முன்புவரை கூடச் சாலைகளுக்கு தார் போடும் வேலைகள் நடந்துகொண்டிருந்திருக்கின்றன.

இந்த மாநாட்டில் சோனியாவின் அரசியல் பிரவேசம், நரசிம்மராவ் - சரத்பவார் கோஷ்டிப்பூசல், நரசிம்மராவின் அரசியல்பலம் என்று பல விறுவிறுப்பான அரசியல் காட்சிகள் அரங்கேறும் என்று காங்கிரஸ் உறுப்பினர்களிடையேபல மான எதிர்பார்ப்புகள் நிலவியது உண்மைதான்.

மாநாட்டின் ஆரம்பம் முதலே பிரதிநிதிகள் பகுதியிலிருந்து அடிக்கடி கூச்சல்களும் கூக்குரல்களும் ஒலித்துக் கொண்டேயிருந்தன இதில் நரசிம்மராவிற்கு எதிரான கோஷங்களும் அடங்கியிருந்தன.

வெளிவிவகார துறையின் முன்னாள் மத்திய அமைச்சரான மாதவ்சிங் சோலங்கி, தனது உரையைஆங்கிலமொழியில் ஆரம்பித்ததும் கூட்டத்தில் பலத்த சலசலப்பு உடனடியாக அதில் தலையிட்ட நரசிம்மராவ் அவரை இந்தி மொழியில் பேசும்படி கேட்டுக் கொண்டார் இந்திப் பிரியர்களின் பலத்த கரகோஷம் அவருக்குக் கிடைத்தது தென் மாநிலங்களைச் சேர்ந்த இன்னுமொருவர் இந்தியில் பேசத் தொடங்கியதும் அதிலும் நரசிம்மராவ் குறுக்கிட்டு அவரை ஆங்கிலத்தில் பேசப் பணித்தார் இவ்வாறாக வடக்கு தெற்கு வேறுபாடுகளை நரசிம்மராவ்சாதுரியமாகத்தவிர்த்திருந்த போதும் சில 'பிரம்மாஸ்திரங்கள்' அவரை நோக்கிக் காத்திருந்தன.

மாநாட்டைப் புறக்கணிப்பதாக பகிரங்கமாக அறிவித்திருந்த கர்நாடக முதல்வர் பங்காரப்பாவும் அதிருப்திக் குரலை ஒலித்துவிட்டுஒதுங்கிக் கொண்டிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் நரசிம்மராவிற்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துவர். என்று எதிர்க்கோஷ்டிகள் காத்திருந்தன. ஆனால்இந்தஇருவரின் சிணுங்கலும் மாநாடு ஆரம்பித்தமறுநாள்மதியம் அவர்கள் திருப்பதிக்கு வருகை தந்தமையோடு அடங்கிப் போயிற்று.

அடுத்துகாங்கிரஸ் கட்சியின் அதிகாரபீடம் என அழைக்கப்படும் காரியக்கமிட்டிக்கு உறுப்பினர்களை தேர்வு செய்யும் கூட்டம் ஆரம்பமானது.முதல் கட்டப் 'பனிப்போர்' முடிந்து இந்தக் கூட்டத்தில் கட்சியின் பல முக்கிய வி. ஐ. பிக்களின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் நிலைக்கு எட்டியது

இந்தக் காரிய கமிட்டிக்கு அகில இந்திய அளவில்இருபது பேர் தேர்வு செய்யப்படுவார்கள். இதில் பத்துப்பேரை நியமிக்கும் உரிமை கட்சித் தலைவருக்கு உண்டு, மீதிப் பத்துப் பேரையும் அகில இந்தியாவிலிருந்து வந்திருக்கும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தேர்வுசெய்வார்கள். 1972இல் நடந்த மாநாட்டிற்குப் பின்னர் காங்கிரஸ் கட்சியில் இப்படி ஒரு தேர்தல் நடந்தது இது முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இந்திரா - ராஜீவ் காலத்தில் இருபது பேருமே கட்சித் தலைவரால் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

கட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று நரசிம்மராவ் அறிவித்ததும் கட்சிக்குள்ளிருக்கும் கோஷ்டிப்பூசல்கள் அம்பலமாகப் போவதாக பலமூத்த காங்கிரஸ் உறுப்பினர்கள் அஞ்சினார்கள். தேர்தலைத் தவிர்க்க கட்சியின் பொருளாளர் சீதாராம் கேசரி, கேரள முதல்வர் கருணாகரன் போன்றோர் பலத்த முயற்சிகள் மேற்கொண்டபோதும் அது தோல்வியையே தழுவியது. ''தேர்தல் நடத்தப்படாவிட்டால் கட்சி பிளவுபடுவது நிச்சயம்'' என்று சரத்பவார் அணியினர் நிருபர்களின் காதுபடவேபேசினார்கள். தேர்தல் மூன்றுமுறை தள்ளிப் போடப்பட்டதையடுத்து பலத்த கூச்சல் நிலவியது. மாலை ஏழு மணியளவில் தொடங்கிய கூச்சல், இரவு பதினொரு மணிக்கு ''தேர்தல் நடைபெறும்'' என்ற அறிவிப்பு வந்த பிறகே அடங்கியது.

மாநாடு நடக்கும் போதே பந்தலின் பின்புறம் நரசிம்மராவ் - அர்ஜுன் சிங் - சரத்பவார் மூவரும் தீவிர ஆலோசனை நடத்தினர். இரண்டாவது தடவை இம்மாதிரி ஆலோசனை நடந்த போது மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்தின் அழைப்பின் பேரில் மூப்பனாரும் கலந்து கொண்டார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதும் பத்து இடங்களுக்குசுமார் இரு நூற்றுப் பதினேழு பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். போட்டியின் தீவிரத்தைக் குறைக்கும் வகையில் சரத்பவார், அர்ஜுன் சிங், நரசிம்மராவ் மூவருமே தமது ஆதரவாளர்கள் பலரை போட்டியிலிருந்து விலகச்செய்யும் முயற்சியில் நேரிடையாக ஈடுபட்டனர். கடும் முயற்சிக்குப் பின் போட்டியாளர்களின் எண்ணிக்கை எழுபத்தொன்றாகக் குறைந்தது வேட்பு மனுவை மீளப் பெறும் நேரத்தை நீடிக்குமாறு தேர்தல் அதிகாரிசந்தூர்க்கர் கேட்டுக் கொள்ளப்பட்டார். வேட்பாளர் எண்ணிக்கை நாற்பத்தெட்டுப் பேராகக் குறைந்ததும் தேர்தல்நடத்தப்பட்டது.

போட்டிக் களத்தில் வாக்கு வேட்டை சூடுபிடித்தது. சரத்பவார், அர்ஜுன் சிங், ஆர். கே. தவான் ஏ.கே. அந்தோணி போன்றோருடன் தமிழகத்தைச் சேர்ந்த மணிசங்கர ஐயர், மரகதம் சந்திரசேகர், ரங்கராஜன் குமாரமங்கலம் போன்றோர் போட்டியிட்ட சில முக்கிய பிரமுகர்கள் ஆவர்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக் கிளை முறைப்படியான தேர்தலை நடத்தவில்லை என்பதால் தமிழக காங்கிரஸ் உறுப்பினர்கள்வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. இதற்காக வாழப்பாடி கோஷ்டியினரும், மூப்பனார் கோஷ்டியினரும் ஒருவரை ஒருவர் தூற்றிக் கொண்டனர்.

தேர்தலுக்கு முதல் நாளில் நரசிம்மராவுக்கு எதிரான கோஷ்டியானசரத்பவார், ஆர் கே. தவான், அர்ஜுன் சிங் ஆகியோர் அணியில் மரகதம் சந்திரசேகரும் சேர்ந்துகொண்டார். ஜிதேந்திர பிரசாத் விஜய பாஸ்கர ரெட்டி போன்றோர் நரசிம்மராவுக்கு ஆதரவான அணியொன்றை சேர்த்துக் கொண்டிருந்தனர். இந்த இரண்டு கோஷ்டிகளிலும் சேராமல் சோனியா குடும்பத்திற்கு நெருக்கமான மணிசங்கர்ஐயர், சதிஸ்சர்மா, ஆகியோர் தனித்தனி வாக்கு வேட்டை நடத்தினர்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது ரங்காராவ் எழுபத்து மூன்று வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

ஹரிஜனங்கள் பெண்கள் யாருமே இந்தத் தேர்தல் மூலம் செய்யப்படாதது பற்றித் தனது அதிருப்தியை வெளிப்படையாகவே தெரிவித்த நரசிம்மராவ், நானாக இருந்தால் இந்த நிலையில் ராஜினாமா செய்வேன் என்று பேசியபோது மேடையில் அர்ஜுன்சிங்வீற்றிருந்தார்.

இந்ததேர்தலின்மூலம்தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஜிதேந்திரபிரசாத்.விஜயபாஸ்கரரெட்டி ஆகியஇருவர் மட்டுமே நரசிம்மராவின் விசுவாசிகள், பிரதமர் பதவி மீது மோகம் கொண்டிருக்கும் சரத்பவார், அர்ஜுன் சிங் ஆகிய இருவரில் அர்ஜுன் சிங்கிற்கு வட மாநிலங்களில் ஆதரவு அதிகரித்திருப்பதை காட்டுவதாக இத்தேர்தல் முடிவு அமைந்துள்ளது எனக் கருதப்படுகின்றது.

எனவே சரத்பவார் இந்த நேரத்தில் நரசிம்மராவிற்கு சங்கடத்தைத் தோற்றுவிக்க மாட்டாரென்றும், அதே வேளை 'ஒருவருக்கு ஒரு பதவி' என்ற கோஷத்தைக் கிளப்புவதன் வாயிலாக கட்சித் தலைவர் பதவியை நரசிம்மராவிடமிருந்து தட்டிப் பறிக்க அர்ஜுன்சிங் முயலுவார் என்றும், நரசிம்மராவ் தன் நிலையைப் பலப்படுத்த நியமனம் செய்யும் பத்துபேர்களில் மூப்பனாரும் இடம் பெறலாமென்றும் பலத்த ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

நன்றி: ஜூனியர் விகடன்

மேற்காசிய அமைதிப்பேச்சு

# கலந்து கொள்ளுமாறு இந்தியாவிற்கு அழைப்பு

(வாஷிங்டன்)

மேற்காசிய அமைதிப் பேச்

இதேவேளை இஸ்ரேல் வசமுள்ள அரபுப் பிரதேசங்களு

களில் கலந்து கொள்வதற்கு ஆட்சேபம் தெரிவித்து இப்

# முரசொலி ஆசிரியரின் மனு உச்ச நீதிமன்றம் நிராகரிப்பு

(சென்னை)

முரசொலி பத்திரிகையின் ஆசிரியர் செல்வத்தைக் கைது செய்யும்படி தமிழக சபாநாயகர் பிறப்பித்த உத்தரவை இடைநிறுத்தி வைக்கும்படி உச்ச நீதிமன்றத்தில் முரசொலி செல்வம் தாக்கல்

வேண்டியதில்லை என்று தமிழகச் சட்டப் பேரவை நிறைவேற்றிய தீர்மானம் நீதிமன்றத்தை அவமதிப்பதாகக் கருதப்படுவதால் அதை முற்றிலும் விசாரிப்பதற்காக சட்டப்பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா

கின்றனர். இந்நிலையில் ஆழ்கடலுக்குச் செல்லுங்கள் மீன்பிடியுங்கள் என அரச அதிபர் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் கூறுகின்றார் என்று தெரியவில்லை.

வடக்கு-கிழக்கில் மீன்பிடி விருத்திசெய்வதற்காக அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அதற்காகப் பெரும் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளமை வடக்கு கிழக்கு நிலைமை பற்றி அரச அதிபர் என்ன எண்ணிக்கொண்டிருக்கின்றார் என்பதையும் ஊகிக்க முடியாது உள்ளது வடபகுதியைச் சூழவுள்ள கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு அரசாங்கம் விதித்துள்ள தடையை சிறிலங்கா வானொலி ஒலிபரப்பியதை அவர் கேட்காவிடினும் பத்திரிகையிலுமா அவர் பார்க்கவில்லை.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச அதிபர் மீன்பிடிக்கவென வழங்கியவலையின் பெறுமதி 750 ரூபாவாகும். இன்றைய விலையில் அது ஒரு சிறுவலைத் துண்டாகவே இருக்கமுடியும். இதனை வைத்துக்கொண்டு வாவியின் ஓரத்தில் மீன்பிடிக்கலாமே ஒழிய வேறு ஒன்றிற்கும் போதாது. இந் நிலையில் ஆழ் கடல் மீன்பிடி பற்றிப் பேசியிருப்பது அரச அதிபரின் அரசவிசுவாசத்தைக் காட்டுகின்றதா? அல்லது மீன்பிடித்தொழிலில் அவருக்குள்ள அறிவுத்திறனைக் காட்டுகின்றதா? இதில் எது உண்மை என ஊகிக்க முடியாது உள்ளது.

இதேவேளை படகு, வலைகள் உட்பட சுமார் 25,000 ரூபாவிற்கு மேற்பட்ட மீன்பிடி உபகரணங்களை சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் வழங்கிவருகிறது. இதனையும் மட்டக்களப்பு அரசஅதிபர் அறியவில்லைப்போலும் உள்ளது. இவற்றை அறியாவிடினும் 750 ரூபாவை வழங்கிவிட்டு ஆழ்கடல் மீன்பிடிபற்றிப் பேசுவது அசட்டுத்தனமானது.

அத்தோடு, 600 கோடி ரூபா வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்டுள்ளமை என அரசாங்க அதிபர் கூறியது சிங்கள அரசியல் வாதிகளின் ஏமாற்றை அரச அதிபரும் திருப்பி ஒப்புவிப்பதாகவுள்ளது. வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு 600 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பினும் அது சிங்களக் குடியேற்றத்திற்கும், சிங்களவரின் அபிவிருத்திக்குமே ஒதுக்கப்பட்டுள்ளது. அழிந்த தமிழரின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவோ, அழிந்தவற்றிற்கு நட்ட ஈடு வழங்குவதற்காகவோ அல்ல,

இந்நிலையில், மட்டக்களப்பு அரச அதிபரின் பேச்சு உண்மைக்குப் புறம்பானதோடு மட்டுமல்ல, நடைமுறையில் சாத்தியப்பாடானதொன்றுமல்ல. முன்னரே சிறிலங்கா இராணுவத்தினதும், அரசாங்கத்தினதும் இன ஒடுக்குமுறையால் நலிந்து போயுள்ள மக்களை மேலும் ஏமாற்றங்களுக்கு உள்ளாக்கி, அரச தரப்பிற்கு நன்மை சேர்க்க முயற்சிப்பது அரச அதிபருக்கு அழகானதல்ல.

மேற்காசிய அமைதிப் பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு இந்தியாவிற்கு அமெரிக்கா அழைப்பு விடுத்திருக்கிறது. நேற்று முன்தினம் வாஷிங்டனில் இதனைத் தெரிவித்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இன்று அமெரிக்க தலைநகரில் ஆரம்பமாகவுள்ள இவ் அமைதிப் பேச்சுக்களில் இருபதிற்கும் அதிகமான பிரதிநிதுக் குழுக்கள் கலந்து கொள்ளவுள்ளனஎன்றார் இம்மாநாட்டிற்கு ஐரோப்பிய சமுதாயமும்தமது பிரதிநிதிகள் குழுவை அனுப்பவுள்ளது.

முள அரபுப் பிரதேசங்களுக்கு வெளியே வசிக்கும் பலஸ்தீனியர்கள் அமைதிப் பேச்சுக்

ஆட்சேபம் தெரிவித்து, இப்பேச்சு வார்த்தைகளை புறக்கணிக்கமுடிவு செய்துள்ளனர்.

# கசாக்கிஸ்தான் ஆட்சியாளர் தலைமறைவு

(மொஸ்கோ)

சிதைவடைந்த சோவியத் யூனியனின் முன்னாள் குடியரசுகளில் ஒன்றாகிய கசாக்கிஸ்தானில் ஆட்சியாளர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

சோவியத் யூனியன் பிளவுபட்டதைத் தொடர்ந்து தனி நாடாகப் பிரிந்த கசாக்கிஸ்தானின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற இஸ்லாமிய அடிப்படை வாதிகளும், லிபரல் மனப்பாங்கு கொண்டோரும் போட்டிட்டு வந்தனர்.

நாடாளுமன்றக் கட்டடத்தினுள் தஞ்சம் புகுந்திருந்த கசாக்கிஸ்தான் அதிபரைபதவி விலகக்கோரி கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வந்த ஆர்ப்பாட்டங்களை யடுத்து அவர் நேற்று இஸ்லாமிய அடிப்படை வாதிகளுடனும் லிபரல்களுடனும் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார். நேற்று முன்தினம் காலை இவ் உடன்பாடு கையெழுத்தானதையடுத்து அவர் நாடாளுமன்ற கட்டடத்திலிருந்து வெளியேறினார். அவர் எங்கு சென்றார் என்பது உடனடியாக அறிவிக்கப்படவில்லை. அத்துடன் நகரமெங்கும் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்துள்ளனர்.

# மனித உரிமை மாநாடு வியன்னாவில் நடைபெறும்

(நியூயோர்க்)

1993ஆம் ஆண்டின் மனித உரிமைகளான ஐ.நா. உலக மாநாடு வியன்னாவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெர்லினில் இந்த மாநாட்டை நடத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வாக்கெடுப்பு எதுவுமின்றி மேற்படி மாநாட்டை வியன்னாவில் நடத்துவது என்ற முடிவை இப்போது ஐ.நா.பொதுச் சபை எடுத்துள்ளது.

# ரஷ்யாவிற்கு எதிராக அமெரிக்கா வாணிபப் போர்

இந்தியாவிற்கு ராக்கட் என்ஜின்களை விற்கும் விவகாரத்தில் அமெரிக்கா எதிர்ப்பு தெரிவிப்பதன் மூலம் அமெரிக்கா ரஷ்யாவிற்கு எதிராக வாணிபப் போர் ஒன்றைத் தொடுத்திருப்பதாக ரஷ்ய விண்வெளி ஏஜென்சியின் தலைவர் அலெக்சாண்டர் ஜனாயியவ் கூறியுள்ளார்.

கடந்தவெள்ளிக்கிழமைமாஸ்கோவில் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்தியாவின் தகவல் தொடர்பு செயற்கை கோள்களின் செலுத்து வாகனங்களுக்கு ராக்கட் என்ஜின்கள் தேவைப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இந்திய மற்றும் சர்வதேச விண்வெளிச் சந்தையில் ரஷ்யா பங்கேற்காமல் தடுக்க அமெரிக்கா விரும்புகின்றது என்றும் அவர்மேலும் கூறினார்.

## ஆப்கானிஸ்தானில்

# நிரந்தர போர்நிறுத்தம் ஏற்படுத்த நடவடிக்கை

ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரச படைகளுக்கும் முஜாகுதீன் தலைவர்குல்புதீன் ஹெக்மத்தியாரின் ஆதரவாளர்களுக்கும் இடையேயான போர் நிறுத்தத்தை நிரந்தரமாக்குவதற்குமுயற்சிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் இரு பகுதியினருக்கும்இடையிலான போர் நிறுத்தம் இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும்,

போர் நிறுத்தத்தை நிரந்தரமாக்குவதற்கான பேச்சு வார்த்தைகளில், ஆளும் சபையின் அதிகாரிகளும் ஹெக்மத்தியாரின் பிரதிநிதிக் குழுக்களும் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் காபூலில் நிலைமைகள் மெது மெதுவாக இயல்புக்குத் திரும்புவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

சொலி செல்வம் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இதேவேளை கோவை மாலை முரசு பத்திரிகையின் ஆசிரியர் சுந்தர் தாக்கல் செய்த இதேபோன்ற மனுவை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் அவரைக் கைது செய்வதை இடைநிறுத்தி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், பேரவைச் சபாநாயகர் உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கு ஏற்ப செயற்பட

சேடப்பட்டி முத்தையா உட்பட பேரவையின் உரிமைக் குழு, பேரவைச் செயலாளர், பொலிஸ் ஆணையாளர் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்புவதென்றும் உச்ச நீதிமன்றம் தாக்கீதுகளை அனுப்பியுள்ளது.

அத்துடன் கைது ஆணைக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

# தென்கை விமானப்படைப் பிரிவு விரிவு படுத்தப்படும்

- கிருஷ்ணகுமார் தகவல்

(கொல்லம்)

திருவனந்தபுரத்திலுள்ள தென்கை விமானப்பிரிவு விரிவு படுத்தப்பட்டு அதில் போர் விமானங்கள் பிரிவு ஒன்று சேர்க்கப்படும் என்று இந்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் எஸ். கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

கொல்லத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த விரிவாக்கப் பணிகளுக்காக கேரளமாநில அரசு பதினைந்து ஏக்கர் நிலம் வழங்கவிருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

## தமிழக பத்திரிகையாளர் பிரச்சினை

# குஜராத் கூட்டத்தில் பேச கர்நாடகம் ஆலோசனை

(கோயம்புத்தூர்)

தமிழக சட்டப் பேரவையில் சில பத்திரிகையாளர்கள் சம்பந்தமாக எழுந்த உரிமைப் பிரச்சினை மற்றும் அதன் விபரங்கள் குறித்து தமிழக சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா தமக்கு கடிதம் எழுதியிருப்பதாக கர்நாடக சட்டப் பேரவைத் தலைவர் என். கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

நேற்று கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் கிருஷ்ணா இத் தகவலைத் தெரிவித்தார் இந்தவிடயத்தை இந்த மாதக் கடைசியில் குஜராத்தில் நடைபெறவுள்ள மாநில சட்டப் பேரவைகள் தலைவர்கள் கூட்டத்தில் விரிவாகவிவாதிக்கலாம் என்று முத்தையாவிற்கு ஆலோசனை கூறப்போவதாகவும் அவர் தெரிவித்தார்

## ஜனாதிபதி தேர்தல்

பிலிப்பைன்சில் ஜனாதிபதி தேர்தல் இன்று நடைபெறுகிறது 1965 இற்கு பின் நடைபெறும் முதலாவது சுதந்திர தேர்தல் இதுவாகும். இத்தேர்தலில் 3 கோடி 20 இலட்சம் பேர் வாக்களிப்பர். ஏழுவேட்பாளர்கள் இதில் போட்டியிடுகின்றனர்.

ஈழநாதம்

# விவாதிக்க அரசு மறுப்பு பொதுக்கூட்டங்களுக்கு முடிவு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரின் அறிக்கை, முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் உடுகம பொல அறிக்கை தொடர்பாக விவாதிக்க அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்காத காரணத்தினால் மேற்படி இரண்டு விடயங்கள் தொடர்பாக மக்கள் முன் கொண்டு செல்ல பொதுக்கூட்டங்களை நடத்துவது என எதிரணி கட்சித் தலைவர்கள் முடிவு எடுத்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற எதிரணி கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது.

இது தொடர்பான முதல் பொதுக் கூட்டம் வரும் 29 ஆம் திகதி கண்டியில் நடைபெறும் என்றும். எதிரணி கட்சியின் மேதின கூட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் கட்சிகள் இந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்தது.

நாட்டின் ஏனைய இடங்களிலும் மேற்படி விடயம் குறித்து தொடர் கூட்டங்களை நடத்துவது எனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 1990 க.பொ.த.சா. பரீட்சை சில பாடசாலை முடிவுகள்

நேற்று வெளியான 1990 ஆம் ஆண்டு க. பொ. த (சாதாரணதர) விசேட பரீட்சை முடிவுகளில் யாழ். நகரின் முன்னணிப் பாடசாலைகளின் மாணவர் பெற்ற அதி விசேடசித்திகளின் பெறுபேறுகள் வருமாறு.

| பாடசாலை | | 7D | 6D | 5D | 4D |
|---|---|---|---|---|---|
| ★ யாழ். இந்துக் கல்லூரி | — | 14 | 21 | 19 | 13 |
| ★ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | — | 6 | 5 | 5 | — |
| ★ யாழ். இந்து மகளிர் கல்லூரி | — | 4 | 8 | 20 | 18 |
| ★ சென் ஜேம்ஸ் கல்லூரி | — | 3 | 4 | 5 | 4 |
| ★ வேம்படி மகளிர் கல்லூரி | — | 1 | 12 | 12 | 21 |
| ★ யாழ். மத்திய கல்லூரி | — | — | 1 | 6 | — |
| ★ தமிழ் திருக்குடும்ப கன்னியர் மடம் | — | — | 3 | 2 | — |
| ★ சென் பற்றிக்ஸ் கல்லூரி | — | — | 2 | 2 | — |
| ★ யாழ். கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம் | — | — | — | — | 3 |
| ★ கொக்குவில் இந்துக் கல்லூரி | — | 1 | 6 | 8 | 8 |

செயல் முறைப் பரீட்சை முடிவுகள் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (பா)

### புலிகளைத்

றும் அவர் தெரிவித்தார்

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கருத்து வெளியிடும் போது இப் பிரச்சினை மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை என்றும், ஒரே நாளில் இப்பிரச்சினையைதீர்த்துவிட முடியாது என்றும் குறிப்பிட்டார்

### பாடசாலை

வதியாக நடைபெறவுள்ளது.

தம்பாட்டி அரசினர் பாடசாலை அதிபர் க. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளஇவ்விழாவில்சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறு

### தொண்டர்

டர்பாக விரிவான பேச்சுவார்த்தைகளைநடாத்தஇருக்கின்றனர் இம் மாதம் இறுதி வரை கொழும்பில் தங்கிநிற்க இருக்கும் இக் குழுவினர் கல்வி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி பிரேமதாசாவுடனும் மேற்படிவிடயம்தொடர்பாக பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு முயற்சிசெய்ய இருப்பதாக தெரிய வருகிறது. கல்விச் சேவைகள் ஆணைக் குழுவைச் சந்திப்பதற்கான கால அட்டவணை ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது. ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான திகதி பற்றி முடிவெடுப்பதற்கு

## திருமலை நட்சத்திரஅணி முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் விக்ரர் ஞாபகார்த்தமாக மாபெரும் உதைபந்தாட்ட இறுதி சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் மாலை 4மணியளவில் கோண்டாவில் குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஏழு பேர் கொண்ட இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் திருமலை நட்சத்திரம் ஏ பிரிவு அணி முதலாம் இடத்தையும், றோயல் பி.பிரிவு அணி இரண்டாம் இடத்தையும், திருமலை நட்சத்திரப் பி பிரிவு அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

## பேராசிரியர் சிவத்தம்பிக்கு மணிவிழாவில் தங்கபதக்கம்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி அவர்களது மணிவிழா நேற்று மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கோலாகலமாக நடைபெற்றது

நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து மாலை 3.00 மணியளவில் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பியும் அவரது பாரியாரும் மங்கள இசை முழங்க அறிஞர்கள், நண்பர்கள், மாணவர்கள் புடைசூழ ஆதீன மண்டபத்துக்கு அழைதது வரப்பட்டார்.

தொடர்ந்து மங்கள இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மங்கள இசையைத் தொடர்ந்து சிறிலசிறி சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், வண ஜி ஏ. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்கினர்

பேராசிரியர் திரு. செ சிவஞானசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு. துரைராசா அவர்கள். பேராசிரியர் சிவத்தம்பிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் தங்கப்பதக்கமும் வழங்கினார் அத்துடன் சிறப்புரை ஒன்றையும் ஆற்றினார் தொடர்ந்து வாழ்த்துப்பா நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. அத்துடன் இவ் விழாவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் திரு. புதுவை ரத்தினதுரை, கம்பன் கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜ். உட்பட பல்வேறு அறிஞர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர். இறுதியில் பேராசிரியர் திரு கா. சிவத்தம்பி நன்றியுரை நிகழ்த்தினார்.

## தெரிவுகுழு உறுப்பினருக்கு 19 ஆம் திகதி அறிவிப்பு?

(கொழும்பு)

தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கே 19 ஆம் திகதி இனப்பிரச்சினை தீர்வு குறித்து அறிவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான மங்களமுனசிங்கா தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் 19 ஆம் திகதி தீர்வு குறித்து தெரிவுக் குழு அங்கத்தவர்களுக்கு அறிவிக்க உத்தேசித்திருக்காம்.

### நீதிமன்றம்

திணைக்களம் பொறுப்பற்ற முறையில் நடந்துள்ளது 7 மற்றும் 17 ஆம் எதிரிகளின் முதல் பெயர் தரப்படவில்லை 5ஆவதுஎதிரி முதியான்சலாகே புத்ததாஸ, 14 ஆவது எதிரி பலகெதரகாமினி ஆகியோர் இறந்து போனார்கள் என்று பொலிஸ் தரப்பில் சொல்லப் படுகிறது. ஆனால் சட்டமா அதிபர் திணைக்களம் இறந்த

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொருவர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று அல்வாய் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இப் போட்டிகள்நடைபெறவுள்ளது

### வீரமுனை

முற்றாக அழிக்கப்பட்ட இக் கிராமம் தவிர்ந்த சுற்றியுள்ள ஏனைய கிராமங்களில் சிங்களவர், முஸ்லிம்கள் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

குடியேற்ற நடவடிக்கைகள் சகல இனங்களுக்கும் பொதுவானது என காட்டவே இக் குடியேற்றம் என கருதப்படுகிறது.

### பட்டதாரி

ஆணைக் குழுவின் அங்கத்தவரான க. ஜெயக்குமார் தெரிவித்தார்.

கொழும்பு. கண்டி. நுவரெலியா. மாத்தளை, பொலனறுவை, புத்தளம், பதுளை, இரத்தினபுரி அம்பாறை, திருமலை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா. முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இப் பரீட்சை நடத்தப்படும். பரீட்சைக்கானவிண்ணப்பமுடிவு திகதி யூன்மாதம் 5 ஆம் திகதியாகும்.


O/L, A/L பரீட்சைகளில் சித்தியடைந்துவிட்டீர்களா;
தொழில்நுட்பக் கல்வியில் ஆர்வமுடையவராய் உள்ளீர்களா?
தொடர்ந்து படியுங்கள்

JAFFNA COLLEGE
INSTITUTE OF TECHNOLOGY
Vaddukoddai

Institute of Engineers - Sri Lanka பரீட்சைக்குத் தோற்றவும், லண்டனில் உள்ள பிரபல தொழில் நுட்பக்கல்லூரியொன்றில் பட்டக்கல்வியைத் தொடரவும் அங்கீகரிக்கப்பட்ட முழுநேர பயிற்சிகள் நடாத்தும் நிறுவனம்.

**1. Technician Diploma Course**

NDT தராதரத்திற்கேற்ப City & Guilds (London) பாடநெறிகள் உள்ளடக்கியது

(i) Civil Engineering - காலம்; 2 வருடங்கள்
(ii) Electronics & Communication Engineering - காலம்: 3 வருடங்கள்
(iii) Mechanical Engineering - ,, ,,
(iv) Electrical Engineering - ,, ,,

★ கல்வித்தகைமை: G.C.E (O/L) கணிதம் - C, விஞ்ஞானம் - C, ஆங்கிலம் - S உட்பட 6 பாடங்களில் சித்தி.
★ யாழ்ப்பாணத்திலும், வட்டுக்கோட்டையிலும் நடைபெறும்.

**2. Diploma Course**

(i) Draughtsmanship (Civil) - காலம்; 1 வருடம்
(ii) Computer Programming & Data Processing - ,, ,,

★ கல்வித்தகைமை: G.C.E (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி.
யாழ்ப்பாணத்திலும், வட்டுக்கோட்டையிலும் நடைபெறும்.

**3. Advanced Diploma in Computing** - காலம்: 1 வருடம்.

Syllabus includes British Computer Society (B.C.S) and Australian Computer Society (A. C. S) Exams.

★ Qualification: 6 Passes in G. C. E. (O/L) including Maths - C and English - S and Should have at least One pass in (A/L).
★ யாழ்ப்பாணத்தில் மட்டும் நடாத்தப்படும்.

4. Technician Certificate Course

விருந்தினர்களாக யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் இளம்பரிதி தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சேரலாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

திகதி பற்றி முடிவெடுப்பதற்கு கொழும்பு சென்றதும் முயற்சி எடுக்கப்பட இருக்கின்றது. கொழும்பு சென்றுள்ள யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மேற்படி சந்திப்புக்களுக்கான ஏற்பாடுகளை கவனித்துவருகிறார். (க)

# மரண அறிவித்தல்

## திரு. து. ஸ்ரீபத்மநாதன்

முன்னாள் முகாமையாளர் அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனம்.

மானிப்பாயை பிறப்பிடமாய்க் கொண்டவரும் 69, வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாய் கொண்டவரும் பத்மாவதியின் அன்புக் கணவரும் காலம் சென்ற திரு திருமதி ந. துரைரத்தினத்தின் அன்பு மகனும் அருந்ததி, குமுதினி, விஜயராகவன் (Germany) விக்னேஸ்வரன் (U K) ஆகியோரின் அன்பு தந்தையும் ஸ்ரீபத்மாநந்தா (காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம்) ஸ்ரீபாஸ்கரன் (நியூற்ரோன் எலெக்ரிக்கல்ஸ் பங்காளர்) அவர்களின் அன்பு மாமனாரும் பிரம்மேந்திரா, பவித்ரா (புனித டொன்பொஸ்கோ) வாகீசன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், திரு. திருமதி க. சிவஞானம் அவர்களின் அன்பு மருமகனும் செல்வராணி சோமசுந்தரம், ஞானம் செல்வரட்ணம், றூபி நாகேந்திரா, அருளானந்தம், மகேந்திரன், பதுமாவதி சந்திரபால், வசந்தா குமரேசன் விமலா சிவரட்ணம், பவானி ஸ்கந்தகுமார் ஆகியோரின் அன்பு சகோதரனும் புஸ்பவதி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனனும் லீலாவதி, புனிதவதி (யாழ். பல்கலைக்கழகம்) கனகசபாபதி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனனும் சின்னையா, கமலா, சூர்யா ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 11-5-92 மாலை 3-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

69, வைமன் வீதி, நல்லூர். (சி/4398) — திருமதி ப. பத்மநாதன் (மனைவி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அதிபர் திணைக்களம் இறந்தவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறது. இந்த விதமான நடவடிக்கைகளினால் எதிரிகள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

## மனித

சனை நடத்திய பின்னர் கொழும்பு திரும்பினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் குழுவின் பணிகளை விரைவு படுத்தி மட்டக்களப்பில் இக் குழுவின் பணியகத்தை அமைப்பதால் ஏற்படக் கூடிய சாதக, பாதகங்களை நேர்வேக் குழுவினர் ஆராய்ந்தனர் என்றும் கூறப்படுகிறது.

விக்க உத்தேசித்துள்ளோம்.

## புதிய

வருகின்றது இவ் மீள்பயிற்சியில், போர்க்களங்களில் முன் செல்லும் கனிஷ்டநிலை அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிப்பதில் தீவிர கவனம் செலுத்தப்படுகின்றது.

இப் புதிய போர் முறைத் திட்டங்கள் தயாரிபபோடு இராணுவத்தினருக்கு அளிக்கப்படும் மீள் பயிற்சிகள் முடிவுற்றதும், வடக்கு, கிழக்குப் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்தரப்பு முடிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

# தமிழீழ காவல்துறை

# வெற்றிடங்கள்

**காவலர் தரம்**

தகமைகள்:- 1. எட்டாம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும்.
2. தமிழில் நன்கு எழுத, வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

உயரம்:- 5' 6''
திருமணமாகாமல் இருத்தல் நன்று

வயதெல்லை:- 18 தொடக்கம் 30 வரை

**சிறைக் காவலர்**

தகமைகள்:- 1. எட்டாம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும்.
2. தமிழில்நன்கு எழுத, வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

உயரம்:- 5' 6''
திருமணமாகாதிருத்தல் நன்று

வயதெல்லை.- 18 தொடக்கம் 30 வரை

மேற்படி விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களுடன் 12-05-92 செவ்வாய்க்கிழமை காலை 8 00 மணிக்கு தமிழீழ காவல்துறை தலைமைச் செயலகத்திற்கு நேரடியாக சமுகந்தரவும்.

பொறுப்பாளர்
தமிழீழ காவல் துறை

[சி/4397]

**4. Technician Certificate Course**

(i) Radio and T. V. Servicing - காலம்: 1 வருடம்
(ii) Air Conditioning and Refrigeration - காலம்: 1 1/2 வருடங்கள்
(iii) Automobile Technology - காலம்: 1 வருடம்

★ கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம் - S விஞ்ஞானம் - S
★ வட்டுக்கோட்டையில் மட்டும் நடைபெறும்.

**5. Craft Certificate Courses** (தமிழ்மூலம்)

(i) ஓட்டுனர், கட்டுமானர், பொருத்துனர் பயிற்சி-காலம்: 6 மாதங்கள்
Welding, Fabrication and Fitting
(ii) மின்னிணைப்பு பயிற்சி - காலம்: 6 மாதங்கள்
Electrical Wiring and Installation Practice

★ கல்வித்தகைமை: G. C. E. (O/L) வரை படித்திருக்க வேண்டும்.
★ வட்டுக்கோட்டையில் மட்டும் நடைபெறும்.

## விசேட கவனத்திற்கு

★ பிறநாட்டு பரீட்சைகளை எடுக்கத்தக்கதாக (5) தவிர்ந்த எல்லா பாடநெறிகளும் ஆங்கில மூலமாக தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும். மேலும் இதற்கு துணையாக பாடநெறி காலம் முழுவதும் ஆங்கிலப் பாடம் கட்டாயமாகப் படிப்பிக்கப்படும்.
★ பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு போதிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து உதவித் தொகை வழங்கப்படும்.
★ நூலக வசதி உண்டு.
★ செயன் முறை பயிற்சி ஜெனரேட்டர்களைக் கொண்டு தரப்படும்.

## முக்கிய குறிப்பு

★ விண்ணப்பப்படிவம் விலை ரூபா 10/-
பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்: a) J. C. I. T. அலுவலகம், வட்டுக்கோட்டை.
b) J.C. I. T., 182, 1 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
★ விண்ணப்பப் படிவங்களை 19. 6. 1992 காலை 10. 00 மணிக்கு முன்னர் J. C. I. T. அலுவலகம், வட்டுக்கேட்டையில் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.
★ போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படும்.

(சி/4391) -பணிப்பாளர்